<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 25.09.2025

**அசல் வழக்கு எண்.424/2024**

**வா.சா.1 – பாஸ்கரன், த/பெ.சுந்தர்ராஜ்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**குறுக்கு விசாரணை**</u>

நீங்கள் என்ன வேலை செய்தீர்கள் என்றால் காவல்துறையில் காவலராக பணியாற்றி 2017 ஏப்ரலில் சிறப்பு உதவி ஆய்வாளராக ஓய்வு பெற்றேன். பிரதிவாதிகள் இருவரையும் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் மேற்படி இருவரும் காஞ்சிபுரம் தாலுகா காவல் நிலையத்தில் 2008 முதல் 2010 வரை பணியாற்றிய பொழுது இருவரும் என்னுடன் பணிபுரிந்த காவலர் மற்றும் அவருடைய மனைவி ஆவார். இரண்டாவது பிரதிவாதி ஜெயசுதா எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் நான் முதல் பிரதிவாதியுடன் பணிபுரிந்த போது அவரை தெரியும். பிரதிவாதிகள் உங்களிடம் அடமானம் கடன் உறுதிச்சீட்டு, காசோலை ஏதேனும் வழங்கினார்களா என்றால் அவசரத்திற்கு பணம் தேவைப்படுகிறது என்று கேட்டார்கள் ஆகவே கொடுத்தேன். எவ்வளவு தொகை எப்போதெல்லாம் கொடுத்தீர்கள் என்றால் கடந்த 09.05.2022 ஆம் தேதி ரூபாய் 3 லட்சம் கொடுத்தேன். வங்கி வாயிலாக கொடுத்தேன். பிரதிவாதிகளிடமிருந்து நீங்கள் ஏதேனும் பணம் வாங்கினீர்களா என்றால் வாங்கவில்லை. ஜெயசுதா உங்களிடம் ஏதேனும் கையொப்பம் போட்ட ஆவணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. வட்டியுடன் பணம் திருப்பி செலுத்துவதாக ஜெயசுதா ஏதேனும் எழுதிக் கொடுத்தார்களா என்றால் இல்லை. ஜெயசுதா உங்களிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியில்லை. அவரை நீங்கள் சம்பந்தமில்லாமல் வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியில்லை. அவ்வாறு நீங்கள் அவரை வழக்கில் சேர்த்துள்ளதால் அவர் உங்கள் மீது தனிப்பட்ட வழக்கு கொடுக்க அதிகாரம் உள்ளது என்றால் சரி இல்லை. ஜெயசுதாவுக்கு எதிரான இந்த வழக்கு முதலில் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. முதல் பிரதிவாதி எப்பொழுது காவல்துறையிலிருந்து ஓய்வு பெற்றார் என்கிற விவரங்கள் சொன்னீர்களா என்றால் சொல்லவில்லை. உங்கள் மனைவி பெயர் கீதா பாஸ்கரன் என்றால் சரிதான். நீங்கள்

மூன்று லட்ச ரூபாய் பணம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் அதற்கு 24 சதவீத வட்டி கொடுப்பதாக ஏதேனும் சொன்னாரா அதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இரண்டு பேரும் வாய்மொழியாக வந்து கேட்டதால் கொடுத்தேன். 24 சதவீத வட்டிக்கு எழுத்து பூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. உங்கள் மனைவியிடம் பிரதிவாதி ஏதேனும் பணப்பரிவர்த்தனை செய்தாரா என்றால் இல்லை. உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் சேர்த்து ஜாயிண்ட் அக்கவுண்ட் வங்கியில் இருப்பதாக கூறுகிறீர்கள் அந்த கணக்கில் எவ்வளவு பணம் பரிவர்த்தனை செய்யப்பட்டது என்கிற விவரங்கள் நீதிமன்றத்தில் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். உங்களிடம் காட்டப்படுகின்ற வங்கி கணக்கு விவரத்தில் கடந்த 09.06.2022 அன்று ரூபாய் 19,800/- பரிவர்த்தணை செய்யப்பட்டுள்ளது உங்களிடம் காட்டப்படுகின்ற வங்கி கணக்கு சரியா என்றால் சரிதான். கடந்த 18/7/2022 அன்று ரூபாய் 18,000/- பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது உங்களிடம் காட்டப்படுகின்ற வங்கி கணக்கு சரியா என்றால் சரிதான். அந்தத் தொகை வட்டியா அல்லது அசலா என்றால் பணம் இருக்கும் பொழுது பணம் கொடுக்கிறேன் கணக்கு பண்ணும் பொழுது வட்டி கழித்து கொண்டு கணக்கு பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார். மேற்படி தொகை வட்டியில் கணக்கு வைக்கப்பட்டது என்றால் வட்டியில் ரூபாய் 6,000/- வரும் மீதி தொகை அசலில் கழிக்கப்பட்டது ஆகும். மேற்படி சங்கதிகளை உங்களுடைய வழக்குரையில் நீங்கள் சொன்னீர்களா என்றால் சொல்லவில்லை. உங்கள் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 24 சதவீத வண்டியுடன் பணம் கொடுத்தும் தொழில் இவரை தவிர வேறு யாருக்கெல்லாம் கொடுத்து உள்ளீர்கள் சொல்ல முடியுமா என்றால் வட்டி தொழில் நான் செய்யவில்லை. ஐ எப் ஸ் என்கிற இன்டர்நேஷனல் பைனான்ஸ் தொழிலில் நீங்கள் இருவரும் பணம் செலுத்தி வருகிறீர்கள் அவ்வாறு செலுத்தப்பட்டதற்கான பரிவர்த்தனை தான் மேற்சொன்ன பரிவர்த்தனைகள் உங்களுக்கிடையே தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனை இல்லை என்று சொன்னால் சரி இல்லை. மேற்படி நிறுவனத்தில் நீங்கள் இருவரும் ஒரு இன்வெஸ்டர்கள் வழக்கிற்காக பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளதாக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதி ஒரு முதலீட்டாளர் என்கிற விவரம் உங்கள் காவல்துறையில் இருக்கும் நண்பர்களுக்கு தெரியுமா உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்களுக்கு பணம் கொடுத்த கணக்கு சேமிப்பு கணக்கா அல்லது

நடப்பு கணக்கா தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உங்களுக்கு நடப்பு கணக்கு என்பது நன்கு தெரியும் தெரிந்தே பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை ஐ எப் எஸ் நிறுவனம் ஒரு மோசடி நிறுவனம் என்பதால் அதில் நடந்த பண பரிவர்த்தனைக்கு நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது என்கிற காரணத்தினால் தனிப்பட்ட பணப்பரிவத்தனைக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று பொய்யாக தனிப்பட்ட வகையில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை. பிரதிவாதி ஒரு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் அவரை நம்பி நீங்கள் பணம் கொடுக்க வாய்ப்பு இல்லை வழக்கில் கூறுவது போல் நிறுவனத்தில் முதலீட்டாளர்கள் என்கிற அடிப்படையில் தான் பணம் பரிவர்த்தனை நடந்திருக்க கூடும் என்று சொன்னால் சரியில்லை. நீங்கள் தொடர்ந்து பணத்தை திரும்ப செலுத்துமாறு கேட்டதாக சொல்கிறீர்கள் எப்போதெல்லாம் கேட்டீர்கள் எத்தனை தடவை கேட்டீர்கள் என்றால் இரண்டு மூன்று முறை நேரடியாக கேட்டேன். அவருக்கு வீட்டின் அருகில் சென்று கேட்டேன். அவருடைய மனைவி இருந்தார்கள் அவரிடமும் கேட்டேன். அவர்கள் தகவல் சொல்வதாக சொன்னார்கள். நீங்கள் வட்டி 24 சதவீதமும் இழப்பீடு 24 சதவீதமும் கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி எந்த விதிமுறைகளின் படி நீங்கள் இழப்பீடு மற்றும் வட்டி தனித்தனியாக கூறுகிறீர்கள் என்றால் தெரியாது. உங்களுக்கு தெரியாத ஒரு விஷயத்தை உங்களுடைய வழக்கறிஞர் டைப் செய்ததில் நீங்கள் கையொப்பம் போட்டு தெரியாத விஷயத்தில் கையொப்பம் போட்டு உள்ளீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் கோரிய தொகை எந்த தேதியில் இருந்து எந்த தேதிக்கான வட்டி அசல் என்கிற விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் பணம் கொடுத்ததிலிருந்து வட்டி கணக்கு செய்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் கூறுவது உண்மையாக இருந்தால் உங்கள் மனைவி கீதா பாஸ்கரன் அவர்களின் ஜாயிண்ட் அக்கவுண்ட் கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பீர்கள் அவ்வாறு நீங்கள் நீதிமன்றத்தில் அந்த கணக்குகளை தாக்கல் செய்யாதது நீங்கள் பொய் வழக்கு தான் தாக்கல் செய்தீர்கள் என்று தெரிய வருகிறது ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் காவல்துறையில் ஒரு அதிகாரியாக பணியாற்றி உள்ளீர்கள் அப்படி இருக்கும் சூழ்நிலையில் நீங்கள் வட்டி தொழில் செய்வது தவறு என்று சொன்னால் சரியில்லை. நான் வட்டி தொழில் செய்யவில்லை. நீங்கள் ஒரு தவறான முன் உதாரணமாக செயல்படுகிறீர்கள் என்றால் சரியில்லை ஆகவே உங்கள்

மீது தனிப்பட்ட வழக்கு தாக்கல் செய்யலாம் என்றால் சரியில்லை. நீங்கள் காவல்துறையில் பணியாற்றியுள்ளீர்கள் கந்து வட்டி வாங்குவது தவறு என்று உங்களுக்கு தெரியும் அப்படி தெரிந்தும் உரிமம் இல்லாமல் கந்து வட்டிக்கு பணம் கொடுத்தது தவறு ஆகவே உங்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. ஆண்டொன்றுக்கு ஆறு சதவீதம் தனிப்பட்ட வகையில் வட்டி கோரி உள்ளீர்கள் ஆக மூன்று வகையான வட்டி முறைகள் இந்த வழக்கில் கோரி உள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் நீதிமன்றத்தை தூய கரங்களுடன் அணுகவில்லை என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.